1

புதிய பொலிவுடன்,
மேலதிகப்
பக்கங்களுடன்
வெளிவரும்
மலைமுரசை
16.09.2012ல் இருந்து
எதிர்பாருங்கள்

விலை – 20.00

ஆவணி மாதம் 17ம் திகதி September 02, 2012

# மலைமுரசு

MALAIMURASU

அறைவு 01 இயம் 06

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

வாக்களியுங்கள்

# அரசியற் கைதிகளை உடனடியாக விடுதலை செய்! திருமலை மக்கள் வேண்டுகோள்.



சிறைச்சாலகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் பகிரங்க மனுவில் கையெழுத்திடும் நிகழ்வு மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் அமைப்பினால் கடந்த வாரம் திருக்கோணமலையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பெருந்திரளான பலர் கலந்துகொண்டு மனுவில் கையெழுத்திட்டனர். (பக்கம் 8)

## கொடகே சாகித்திய விருதுப் போட்டியில் திருமலைக் கலைஞர்கள்

2012ம் ஆண்டிற்கான கொடகே சாகித்திய விருது வழங்கும் விழாவில் சிறுகதைத் துறைக்கு வழங்கப்படும் விருதுக்காக இம்முறை திருமலைக்குப் பெருமை சேர்த்த இரு எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதிகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. (பக்கம் 8)

## திருமலையின் வாக்குச் சீட்டு 26 அங்குலம்

திருக்கோணமலையின் வாக்குச்சீட்டு 26 அங்குல நீளமானது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 16 கட்சிகளையும் 16 சுயேட்சைகளையும் கொண்ட திருமலைத் தேர்தல்களத்தில் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணி முடிவடைந்துள்ள நிலையில் இத்தகவல் வெளியாகியுள்ளது. (பக்கம் 8)

### புதிய சுதந்திரக்கட்சி அலுவலகம் கிண்ணியாவில்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிண்ணியா கிளை சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம அவர்களால் கடந்தவாரம் கிண்ணியா புகாரியடிச் சந்தியில் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழா கிழக்கு மாகாணசபையின் திருக்கோணமலை மாவட்ட வேட்பாளர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்றது. (பக்கம் 8)

## கைத்தொலைபேசியால் உயிரிழந்தார் தொழிலாளி

சீனக்குடாச் சந்தியில் 29.08.2012ன் அதிகாலையில் நிகழ்ந்த விபத்தொன்றில் அமரசிறி பெரேரா அத்தநாயக்க என்ற ஒப்பந்தத் தொழிலாளி தலைசிதறிப் பலியானார். (பக்கம் 8)

## ஸ்ரீ லட்சுமி நாராயணர் கோவிலில் உறியடித்திருவிழா

தெட்ஷிண கைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணமலையில் பதிகொண்டுள்ள ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் கோவிலில் 08.09.2012 சனிக்கிழமையன்று ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தியும் உறியடித் திருவிழாவும் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளன.

அன்பனுக்கு அன்பன், ஆழவந்த பாற்கடலோன், கள்ளமுடை கண்ணன், தசாவதார மூர்த்தி, என பலவாறு பூலோகத்தில் போற்றித் துதிக்கப்படும் ஸ்ரீ கிருஸ்ண பகவானின் ஜனன தின நிகழ்வில் அடியார்கள் பெருந்திரளாக கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் 07.09.2012 வெள்ளிக்கிழமை இரவு 08 மணி முதல் (பக்கம் 8)

On Line Recharge

VIDEOCON

airtel digital TV

SUN DIRECT

dishtv

புதிய
இணைப்புக்களை
உடனே பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனைக்குப் பின்னரான
மிகச்சிறந்த சேவை

உடனே நாட
வேண்டிய இடம்

New Trinco Stationery No.27,3rd Cross Street,Trincomalee. 0262223071

## திருமலையில் 14 தேர்தல் முறைப்பாடுகள்

கிழக்கு மாகாணத் தேர்தல் களத்தில் வன்முறைகள் குறைந்த மாவட்டமாகத் தற்போதுவரை திருமலை பதிவாகியுள்ளது. மொத்தமாக 117 (பக்கம் 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042


**வணக்கம் !**

உங்களின் கைகளில் வாக்குச் சீட்டு வந்தமர்ந்திருக்கும் என எண்ணுகின்றேன். இவ் வாக்குச் சீட்டைக் கையில் வைத்துக்கொண்டு வானத்தைப் பார்த்துச் சிந்திப்பதைப் பெரியவர்களும், நண்பர்களின் கண்களைப் பார்த்து யோசிப்பதை இளையோரும் இன்னும் எத்தனையோ விதமாகத் தமது யோசனைகளை வெளிப்படுத்தும் மக்களுமாக இந்த மண் அடுத்துவரும் 6 நாட்களைக் கடக்கப்போகின்றது.

நீண்ட பெருங்கடலில் முத்துக் குளிப்பதற்குக் கூட இவ்வளவு சிந்தனைகள் வேண்டியிருப்பதில்லை. ஆம்! இனி வரும் தேர்தல்கள் யாவும் ஒரு தனிமனிதனின் வாழ்வையும், அவன் சார்ந்த உறவுகளின் வாழ்வையும், அவன் வாழும் சமூகத்தின் வாழ்வையும், அவனுடையது என்று சொல்லிக் கொள்ளும் அவனது மண்ணின் பிடிப்பையும் தீர்மானிப்பவையாகவே எமக்கு இருக்கப் போகின்றன. அடையாளத்தின் முன்னும், இலக்கங்களின் முன்னும் நாம் இடப் போகும் புள்ளடிகளே இறுதி நாளில் நாம் புதைந்து போகும் மயானத்தைக் கூடத் தீர்மானிக்கப் போகின்றன.

எனவே நாங்கள் யாவரும் எமக்காக வாக்களிக்கா விட்டாலும் எமது உறவுகளுக்காக, நண்பர்களுக்காக வாக்களிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. எங்களிற் சிலர் சொல்வது எமக்குக் கேட்கின்றது. நான் வாக்களிப்பதால் என்ன மாற்றம் தான் நிகழ்ந்துவிடப் போகின்றது? என்பதே அது. நிச்சமாக மாற்றம் நிகழும். நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்குகளும் உங்கள் இருப்பைப் பறைசாற்றுபவை. உங்கள் ஒற்றுமையைப் பறை சாற்றுபவை. உங்கள் கொள்கையைப் பறைசாற்றுபவை. இவையெல்லாம் உங்களின் ஒரு வாக்கினால்தான் நிகழும். மேலும் நீங்கள் வாக்குப் போடாவிட்டால் யாராவது உங்கள் பெயரில் போட்டுவிட்டால்???? நீங்கள் அக்கணத்தில் யாராயிருப்பீர்கள் தெரியுமா? ஒரு கள்ளனாக, ஒரு போக்கிரியாக, ஒரு வெறிகாரனாக, ஒரு மடையனாக, ஒரு மிருகமாக...... உங்களது பெயரை அழைக்கும் போது யாராவது மேலே குறிப்பிட்ட ஒருவன் வருவதை உங்கள் மனக் கண்ணில் திரையிட்டுப் பாருங்கள்.

எனவே நீங்கள் நீங்களாக வாழ்வதற்காக......

**தயவுசெய்து
வாக்களியுங்கள்.**

-ஆசிரியர்-


**வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்**

தொடர்புகட்கு:
159A, 2ம் மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com, 0754252042
58, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை.


## மூதூரில் சாக்கடை நீர் சுத்திகரிப்பு

இலங்கையில் இரண்டாவது சாக்கடை நீர் சுத்திகரிப்பு நிலையம் மூதூர், கட்டைப்பறிச்சான் தெற்கு, கணேசபுரத்தில் அமைக்கப்பட்டு கடந்த 2012.08.22 ஆந் திகதி மூதூர் பிரதேசசபையிடம் கையளிக்கப்பட்டது. மூதூர் பிரதேசசபையின் கௌரவ தவிசாளர் A.M. ஹரீஸ் தலைமையில் பரீட்சார்த்தமான சுத்திகரிப்பு இடம் பெற்றதை அடுத்தே இந்நிலையம் மூதூர் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிதி அனுசரனையுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒத்துழைப்புடன் மல்டிசர் நிறுவனம் இத்திட்டத்தினை முன்னெடுத்து நிறைவு செய்து பிரதேச சபையிடம் கையளித்தது.

## இழுபறியில் கருமலையூற்றுப் பள்ளிவாயல்

திருக்கோணமலை கரிமலையூற்று பள்ளிவாயல், பிரதேச முஸ்லிம் மக்களிடம் மிக விரைவில் மீளக் கையளிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருக்கோணமலையில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேடபாளர் நஜீப் அப்துல் மஜீத் கூறியுள்ள கருத்து முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என திருக்கோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு தெரிவான சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர் அப்துல் லத்தீப் மொகமட் பஷீர் கூறினார்.

(கருமலையூற்று பள்ளி வாயலில் தொழுகை மேற்கொள்ள படையினர் அனுமதி வழங்கியதாக கடந்த வாரம் எமது மலைமுரசிலும் கூட செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.)

இச் செய்தி பிரதேச முஸ்லிம் மக்களை பிழையான வகையில் திசை திருப்பும் கபட நாடகம் எனவும் இதனை பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அப்துல் லத்தீப் மொகமட் பசீர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.

கருமலையூற்றுப் பகுதிக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் அப்துல் மஜீத் ஆகியோர் ஒன்றரை மணிநேரம் படையினருடன் பேசி பள்ளிவாயலை பார்வையிட அனுமதி பெற்றனர். அவர்களுக்கு பள்ளவாசலை பார்வையிட மட்டுமே அப்போது அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் பள்ளிவாய'ல் மீண்டும் பிரதேச மக்களிடம் கையளிக்கப் படவில்லை என்பதே துல்லியமான உண்மையாகும். எனவே எமது மக்களை திசை திரும்பும் கபட நாடகங்களை நடத்த வேண்டாம் என பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் உரியவர்களை வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதே வேளை, கருமலையூற்று பள்ளி தொடர்பில் அப்துல் லத்தீப் மொகமட் பசீர் தெரிவித்த கருத்து தொடர்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் அப்துல் மஜீத்திடம் கேட்டபோது, பாதுகாப்பு தரப்பினருடனும் அரசாங்க உயர்மட்டத்தினருடனும் பேசி, பள்ளிவாயலை மிக விரைவில் பிரதேச முஸ்லிம் மக்களிடம் கையளிக்கத் தான் முயற்சிகளை எடுத்து வருவதாகவே தான் தெரிவித்ததாக அவர் கூறினார்.

## திருமலையில் டெங்கு நோயின் தாக்கம் குறைந்தது

திருக்கோணமலை பொதுச்சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 2012ஆம் ஆண்டில் ஜனவரி முதல் மே மாதம் வரையான காலப்பகுதியில் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 07 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் 2011ஆம் ஆண்டில் 42 பேரும், 2010ஆம் ஆண்டில் 236 பேரும், 2009ஆம் ஆண்டில் 109 பேரும், 2008 ஆம் ஆண்டில் 93 பேரும் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர் என்று பொதுச் சுகாதார வைத்தியத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருக்கோணமலையில் டெங்கு பரவுவதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான காரணங்களாக பாரிய அளவிலான துப்பரவு செய்யும் செயற்றிட்டமும், திட்டமிட்ட முறையிலான நுளம்பு பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததுமே காரணங்கள் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. திருக்கோணமலை பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்தில் உள்ள 123 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் 10 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பிரதேசங்களே டெங்கு பரவக்கூடிய ஆபத்தான பிரதேசங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன. இப் பிரதேசங்களில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை [illegible] பாரிய அளவிலான [illegible] மூன்று குழுக்களாகப் பிரிந்து மேற்கொள்ளப்படுவதாக பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகவட்டாரங்கள் தெரிவித்தன. மனையாவெளி, சுமேதகம, தில்லைநகர், ஜின்னாநகர் - ஜமாலியா, துளசிபுரம், முருகாபுரி, இலிங்கநகர், அபயபுர, அன்புவழிபுரம், உவர்மலை ஆகிய பகுதிகள் டெங்கு பரவும் ஆபத்துக்குள்ளான இடங்கள் என்று அடையாளங்காணப்பட்டுள்ளன என்று பொதுச் சுகாதார வட்டாரங்கள் கூறின.

## பகவானுக்கு முன் படமெடுக்க வேண்டாம்

இலங்கைக்குச் சுற்றுலா செல்லும் பிரித்தானியர்கள் புத்தர் சிலைகளுக்கு முன்னால் நின்று ஒளிப்படங்களை எடுப்பதில் கவனம் கொள்ளுமாறு பிரித்தானிய அரசாங்கம் பரிந்துரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

புத்தர் சிலைக்கு முன்னால் தியானம் செய்வதுபோல் ஒளிப்படம் எடுத்த பிரெஞ்சுச் சுற்றுலாப் பயணிகளுக்கு காலி நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்த நிலையிலேயே பிரித்தானியா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இத்தகவலை பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பிரித்தானிய குடிமக்களுக்காக விடுத்துள்ள பயண [illegible] அறிவிப்பிலேயே [illegible]

## "சுற்றுலாப் பயணிகள் பாதுகாக்கப்படுவர்"

திருக்கோணமலையை நோக்கி வரும் சுற்றுலா பயணிகளை பாதுகாக்க திருமலைக் காவல் துறையில் உயிர்ப் பாதுகாப்பு பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருக்கோணமலை மாவட்டத்திற்கு வேறு மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் இருந்தும் பெருமளவிலான சுற்றுலா பயணிகள் நாள்தோறும் வருகை தருகின்றனர். அவர்களுக்கு ஆபத்துகள் ஏதும் நிகழாதவாறு பாதுகாப்பதற்காக இந்த பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரிவில் பயிற்சி பெற்ற 31 காவல்துறையினர் இணைக்கப் பட்டிருக்கின்றனர். இதற்கான பரிந்துரைகளையும், கண்காணிப்பையும் திருக்கோணமலை காவல் துறைப்பிரிவு அத்தியட்சகர் பந்துல விஜயவர்தன மேற்கொண்டு வருகிறார்.

## விளையாட்டுத் திடல் பறிபோனது - தமிழ்த் தலைவர்கள் பாராமுகம்

மூதூர் கிழக்கின் மக்களுக்கு வரப்பிரசாதமாய் அமைந்த ஒரேயொரு பொது மைதானம் கடற்கரைச்சேனையில் அமைந்துள்ள நாவலடிச்சந்தியில் அமைந்துள்ள மைதானமேயாகும். சகல ஊர் மக்களும் ஒன்றுகூடி விளையாட்டுப் போட்டிகளையும், விழாக்களையும் கொண்டாடும் இடம் இதுவே. இதன் ஒரு பக்கம் மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி வங்கிக்குரிய கட்டடமும் அமைந்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டின் பின் மீளக் குடியேற்றப்பட்ட மக்கள் கடற்கரைச்சேனையின் ஒரு பகுதியில் மட்டும் வாழ உரிமை பெற்றுள்ள நிலையில் சமுர்த்தி அபிவிருத்தி வங்கிக் கட்டடத்தில் வந்தமர்ந்த காவல்துறையினர் தற்போது இம் மைதானத்தையும் முட்கம்பிகளைக் கொண்டு முழுமையாக தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் எனப் பிரதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் விளையாட்டுத்திடலைத் தமது பாவனைக்குட்படுத்த முடியாத நிலை தோற்றியுள்ளதாகவும் மக்கள் கூறியுள்ளனர்.

இவ்விடயத்தைத் தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ள மக்கள் அத்தலைவர்கள் பாராமுகமாக இருப்பதாகவே கருதுகின்றனர்.

## ஆஸி நோக்கிப்பயணித்த 21 பேர் மட்டக்களப்பில் கைது

சட்டவிரோத அவுஸ்திரேலியப் பயணிகள் 21 பேர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நடந்து முடிந்தது புலமைப்பரிசில்

நடந்து முடிந்த ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் நாடு முழுவதுமிருந்து 318,416 மாணவர்கள் தோற்றியுள்ளனர். இவர்களுள் 77926 பேர் தமிழ் மொழி மூல மாணவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பிரச்சனையே முஸ்லிம்களுக்கும் - சம்பந்தர்

தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைத்தான் முஸ்லிம் மக்களுக்கும் உள்ளது. எனவே நடைபெறவுள்ள இந்த தேர்தலை சர்வதேச சமூகம் மிகவும் விழிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது. தனித்துவம் மிக்க இந்தத் தேர்தலில் ஆளும் தரப்பில், போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளரும் தெரிவு செய்யப்பட இடமளிக்கக் கூடாது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம், திருக்கோணமலை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை தேர்தல் வேட்பாளர்களை ஆதரித்து 26.08.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கோணமலை நகரசபை மண்டபத்தில் நடாத்திய தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த தேர்தல் அறிவிக்கப்பட்ட காலம் தொடக்கம் எமது பிரச்சினை முன் எப்போதும் இல்லாத அளவிற்குச் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும். யுத்த காலத்தில் இரு தரப்பினராலும் சர்வதேச சட்டத் திட்டங்கள் மீறப்பட்டுள்ளன எனவே இரு சாரார் மீதும் பக்க சார்பற்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இவை தொடர்பில் ஐக்கிய நாட்டு சபையின் 2013ம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெறும் அமர்வில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கோசங்கள் உயர்ந்துள்ள வேளையில் அரசு கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்ற தேர்தலை அறிவித்துள்ளது. இவ்விடத்தில் தான் எமது தனித்துவம் காக்கப்படவேண்டும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதை முஸ்லிம் மக்கள் விரும்பாததன் விளைவாகவே முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுகிறது. தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைத்தான் முஸ்லிம் மக்களுக்கும் இருக்கிறது. எனவே இந்த தேர்தலில் வெற்றி பெறும் ஒவ்வொரு தமிழ் வேட்பாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்களாகவே இருக்கவேண்டும். இது அறுதிப் பெரும்பான்மையை பெற வழிவகுக்கும் எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஈ.சரவணபவன், பொன்.செல்வராஜா மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான க.துரைரட்ணசிங்கம், மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் சி.தண்டாயுதபாணி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

# ஒற்றுமையைத் தேசத்திற்குக் காட்டுவோம் - ஹக்கீம்

தமிழ் தேசியத்தின் ஒற்றுமை முஸ்லிம் தேசியத்துக்கு ஒரு பாடமாகும்: எமது சமூகத்தின் ஒற்றுமையை இந்தக் கட்டத்தில் நாம் காட்ட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான றவூக் ஹக்கீம் தெரிவித்தார்.

குச்சவெளியில் கடந்த 26.08.2012 அன்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அம்பாறை மாவட்டத்திற்கு அடுத்த படியாக அதிகூடிய முஸ்லிம் விகிதாசாரம் திருக்கோணமலை மாவட்டத்திலேயே உள்ளது. எனவே பட்டியல் போட்ட அரசின் அநியாயங்களுக்கு உடனடி தீர்வினை முஸ்லீம்கள் இம் மாகாணச்சபைத் தேர்தலில் நிரூபிப்பார்கள் என்றார்.

அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்போடு முஸ்லிம் காங்கிரஸ் சேர்ந்து ஆட்சி அமைத்துவிடுவார்கள் என்ற பயம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் என்ற இந்த இரண்டு கட்சிகளும் பெரும்பான்மை தமிழ் பேசும் மக்களைக் கொண்ட மாவட்டத்தில் இருந்து தத்தமது அதிகப் பெரும்பான்மையை நிரூபிக்கின்ற ஒரு தனித்துவமான அரசியல் போராட்டத்தில் தயக்கமில்லாமல் இறங்கி இருக்கிறது. இந்த தேர்தலில் மக்களின் பேராதரவு தமக்குத்தான் உண்டு என்பதை இவ்விரு கட்சிகளும் நிரூபித்தால் நாங்கள் சந்திக்கின்ற நெருக்கடிக்கும் கஷ்டங்களுக்கும் உடனடி தீர்வினை சர்வதேசத்தின் உதவியுடன் பெறக்கூடியதாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை மாகாண ஆட்சியென்பது பொம்மையாட்சிதான். உண்மையில் ஒரு ஆளுநர் ஆட்சிதான் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வருகிறது. நிர்வாக ரீதியாக திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் இருந்த போதும் அரசியல் ரீதியாக ஆளுநர்தான் எல்லாத் தீர்மானங்களையும் நிறைவேற்றுபவர். ஒரு விதமான அலட்சியப் போக்குதான் இந்த மாகாணத்தில் நிலவி வருகிறது. இது போன்று வேறு எந்த மாகாணத்திலும் கிடையாது.

இந்த நிலைமையிலிருந்து நாம் மீண்டுவர வேண்டும். அதற்கான புதிய பாரம்பரியத்தை உருவாக்க வேண்டும். இதற்காகத்தான் நாம் தனித்து போட்டியிடுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டின் சனநாயகத்தைக் காப்பது கிழக்கு வாழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது திருக்கோணமலை ஐ.தே.க. வேட்பாளர் மஹ்ரூப்

நாட்டில் ஜனநாயகம் செத்து விட்டது. அராஜகம் தலைவிரித்தாடுகிறது. தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் ஆட்சியாளர்கள் எதிரிகளாகவே பார்க்கின்றனர். இவற்றிற்கு முடிவு கட்டுவது மக்களின் கைகளில் தான் தங்கியுள்ளதென்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபையின் உறுப்பினருமான எம்.ஏ.எம்.மஹ்ரூப் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் பௌத்த சிலைகளை அங்கும் இங்குமாக வைப்பதும் ஏனைய மதத்தினரின் வணக்கஸ் தலங்களை சேதப்படுத்துவதும் பேரினவாதிகளின் விளையாட்டாகி விட்டது. பொருட்களுக்கு நினைத்தவுடன் விலையேற்றுவதும் நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டுவதும் சர்வ சாதாரணமாகி விட்டது. அனைத்து சமயங்களும் அவற்றைச் சார்ந்தோரும் சமமாக இலங்கையர் என்ற கண்ணோட்டத்துடன் நடத்தப்படுவர் என்று கூறிக்கொண்டு குரோதத்தை வளர்க்கும் செயல்களே நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்கு வருவது யார் என்பதைத் தீர்மானிக்கும் கட்சியாக எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியே இருக்கப்போகின்றது. ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்குக்கு கிழக்கு மாகாணத் தேர்தலில் மக்கள் சரியான பாடத்தைப் புகட்டவேண்டும். நாட்டின் ஆட்சி மாற்றத்திற்கு அடித்தளமாக அமையப்போவது கிழக்கு வாழ் மக்களின் தீர்ப்பாகும் என்று மஹ்ரூப் தெரிவித்தார்.

## நிருபர்கள் தேவை

மலைமுரசு பத்திரிகைக்கு பிரதேச பத்திரிகை நிருபர்கள் தேவை. கொடுப்பனவுகள் வழங்கப்படும் விருப்புடையவர்கள் உங்கள் சுய விபரக் கோவையை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கோ, தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

# பிச்சையேந்து படலம்


பிச்சைக்காரர்களில் பல வகையினருண்டு
வீதி வீதியாய் சிலபேரும்
கோயில் வாசல்களில் சில பேரும் பஸ்சில்
பாடியபடி சிலரும் பிச்சை எடுப்பதுண்டு

பிச்சை எடுப்பது சட்டத்திற்கு புறம்பானதுதான்
ஆனாலும் சட்டப்படி பிச்சை எடுப்போரும் உளர்
எடுத்த பிச்சைக்கு கணக்கு கேட்பர் என
எப்போதும் எடுப்பதில்லை - அவர்கள் பருவகாலப்
பிச்சைக்காரர்கள்

குறித்த பருவத்தில் வீதி வீதியாய் சென்றும்
மேடுகளில் மேடை அமைத்தும்
எமது தேவை எதுவென எமக்கே சுட்டிக்
காட்டியும் - வண்ணப் பிரசுரங்களுடன் ஆரவாரமாய்
எடுப்பார்கள்

பிச்சை பெற்றபின் தலை மறைவாவர்
மீண்டும் அடுத்த பிச்சை பருவத்திற்கு
அரை மாதம் முன்பாக தலை காட்டுவார்கள் - அப்போதும்
அப்பாவித்தனமாய் பிச்சை இடுவோம்

எடுக்கும் வரை அவர்களும்
கொடுத்த பின் நாங்களும்
பிச்சைக்காரர்களாய் இருப்போம்



**பத்ம பிரஷன்**
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களைப் பிடிப்பவன்

மேற்படி தலைப்பில் அமரர் சி. பற்குணமவர்களின் 31ம் நினைவு மலரில் ஒரு கவிதை எழுதியிருந்தேன். திரு.சி.பற்குணமவர்களுக்கும் எனக்குமான உறவு மிகவும் குறுகிய காலத்தைக் கொண்டது. தீண்டாமைக்கெதிரான போராட்ட காலத்தில் அவரது ஊரும், அவரும் ஆற்றிய பணிகள் மகத்தானவை. ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து தனது கல்விப் புலமையால் உயர்பதவிக்கு வந்தவர். உயர் பதவிக்கு வந்தபோதும் சக உயர் சமூக அதிகாரிகளால் புறக்கணிப்புக்கு ஆளானவர். பதவியில் பல தடைகளைக் சந்தித்தவர். இறுதி நாட்களில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளராக வருவதற்கான சகல தகுதிகளைப் பெற்றிருந்தும் சாதியின் காரணமாக அப்பதவி மறுக்கப்பட்டவர்.

"மகுடிக் குறவன் முன் ஆடேன் அசையேன்" என காட்டமான கவிதை படைத்தவர்

இளமைக்காலத்தில் அவரை எட்ட இருந்து பார்த்து அறிந்திருந்தேன். ஒரே கட்சியை நேசித்தவர்கள் என்ற போதும் நெருங்கிப் பழகியதில்லை. 91ம் ஆண்டு கலவர நேரம் திருக்கோணமலையிலிருந்து அகதியாக குடும்பத்துடன் யாழ்ப்பாணத்திற்கு புலம் பெயர்ந்திருந்தேன். பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக கையொப்பமிட்டுக் கொண்டிருந்தேன். மாகாண மத்திய அரச செயலக ஊழியர்களின் அன்றைய செயல்பாடு அப்படியாக இருந்தது.

புலம் பெயர்ந்த ஊழியர்களுக்கு ஒரு குறிக்கப்பட்ட அளவு சம்பளம் யாழ் கச்சேரியில் வைத்து ஒரு அதிகாரியினால் வழங்கப்படுவதாக ஒரு செய்தி எங்கள் காதில் விழுந்தது. பல உயர் அதிகாரிகள் புலம் பெயர்ந்திருந்த போதிலும் யாழ் அரச அதிபரிடம் தனது தற்துணிவையும் நம்பிக்கையையும் பயன்படுத்தி அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் பணியை திரு.சி. பற்குணம் யாழ் கச்சேரியில் வைத்து வழங்கிக்கொண்டிருந்தார்.

பருத்தித் துறையிலிருந்து இருபது மைல் தூரம் சைக்கிள் ஓடி கச்சேரியை அடைந்தேன்.
பற்குணமவர்களின் தற்காலிகமான அலுவலக வாயிலில் ஏராளம் அரச ஊழியர்கள். நானும் கியூவில் நின்று.... பற்குணமவர்களின் உதவியைப் பெற முயன்று கொண்டிருந்தேன். ஏலவே பற்குணமவர்களைக் கண்டிருந்த போதிலும் அவருக்கு என்னைத் தெரியாது. அவர் ஏற இறங்கப் பார்த்த பின்... " உம்மை எனக்குத் தெரியாது... எப்படி நான் பணம் வழங்குவது "என என் கோரிக்கையை மறுதலித்தார்.
இருபது மையில் சைக்கிள் ஓடி விறுவிறுத்து வந்த நான் மனம் சோர்ந்து வெளியில் வந்தேன் வெளியே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் எனது மைத்துனநொருவர் நின்று கொண்டிருந்தார். பாதைகள் தடைபட்டிருந்தமையால் அவரது பயணமும் தடைப்பட்டிருந்தது. அவருக்கு சி.பற்குணமவர்களுடன் நெருங்கிய பழக்கமிருந்தது. அவரிடம் எனது நிலமையை விளக்கினேன். அவர் திரும்ப பற்குணமவர்களிடம் அழைத்துச்சென்று என்னை அறிமுகப்படுத்தினார் அதன்பிறகே எனக்கு அம்மாதச்சம்பளத்தில் ஒரு பகுதிகிடைத்தது. அன்று சி. பற்குணமவர்கள் சந்தேகப்பட்டது போல கச்சேரியில் வைத்து சம்பள முற்பணம் பெற்ற பலர் அத் தொகையைத் திரும்பச் செலுத்தாத காரணத்தால் திரு.சி.பற்குணமவர்கள் சிக்கல் நிறைந்த அரச நடைமுறையை எதிர் கொண்ட சம்பவம் பிறகு நிகழ்ந்தது ஒருமுக்கியமான உண்மை.

திருக்கோணமலை திரும்பிய ஊழியர்களோடு நானும் சிரமத்தின் மத்தியில் மீள வேலையில் இணைந்து கொண்டேன். காலம் மெல்லக்கரைந்து கொண்டிருந்தது. கூட்டுறவு ஆணையாளராக இருந்த பற்குணமவர்கள் மனிதவள மேம் பாட்டு நிலையம் என்ற நூல் நிலையம் ஒன்றை டொக்யாட் வீதியில் உருவாக்கினார். சமகால இலக்கிய நூல்கள் ஏராளம் அங்கு குவிந்துகிடந்தன. வ.அ.வின் பெரும் பொழுதுகள் அந் நூல் நிலையத்திலேயே கழிந்தன. நானும் ஒரு வாசகன் ஆயினும் திரு பற்குணத்தின் தொடர்பு எனக்கு இப்போதும் எட்டத்திலேயே இருந்தது. உண்மையைச் சொல்கிறேன் நான் யாழில் பெற்ற பணம் எனது சம்பளத்திலிருந்து கழிக்கப் பெற்றுவிட்டது.

எனக்கு இப்போது பதிப்பகத் திணைக்களத்தில் வேலை மாற்றமாகியிருந்தது. ஒரு தகுதியற்ற மனிதாபிமானமற்ற ஒரு கெட்ட மனிதனின் கீழ் நான் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் தனது தகுதியை மறந்து அந்த அயோக்கியன் என்னை சக ஊழியர்கள் மத்தியில் தரக்குறைவாக கிண்டலடிப்பதும் அவமானப்படுத்துவதுமாக இருந்தான். அந்த விபரங்களை பிறிதொரு பாடலில் எழுத இருப்பதால் இப்போது தவிர்த்துக் கொள்கிறேன்.

மனிதவள மேம் பாட்டு நிலைய மேல்மாடியில் பயனுள்ள கருத்தாடல்கள் அடிக்கடி நிகழ்வதுண்டு அதற்கான ஏற்பாடுகளை பற்குணமவர்கள் செய்திருந்தார். திருக்கோணமலைக்கு



-நந்தினி சேவியர்-

வரும் இலக்கிய,அரசியல்,பிரமுகர்கள் பற்குணத்தாரின் இக் கருத்தாடல் நிகழ்வுகளில் பங்குபற்றுவார்கள். பேராசிரியர் க.சிவத்தம்பி, கோமால்சுவாமிநாதன்- சண்முகம் சிவலிங்கம், மு.பொன்னம்பலம், சு.வில்லரெத்தினம், வ.அ.இராசரெத்தினம் ஆகியோர் இக் கருத்தாடல்களில் பங்கு பற்றிய முக்கிய நபர்களாகும்.

நவராத்திரி 9 நாளும் சிறப்புரைகளும், கவியரங்குகளும் நடைபெறும். 50 பேருக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொள்வார்கள். ஆரோக்கியமான நிகழ்வாக அந்த நிகழ்வு விளங்கியது. அது உண்மையில் திருக்கோணமலையில் பதிந்த உன்னதமான சம்பவங்களில் ஒன்று ஒரு பகல் - நவராத்திரி காலம் திரு.M.I.A. ஜபார் என்னைக் தேடிப் பதிப்பகக் திணைக்களம் வந்தார். சில நல்ல திரைப்படங்கள் - எனும் தலைப்பில் என்னை மறுதினம் ஒரு பேச்சை மனிதவள [illegible] நிகழ்த்துமாறு [illegible] பற்குணத்தின் அனுமதியுடன் தான் அந்த ஏற்பாடு. நான் எனது மனிதநேயமற்ற உதவிப் பணிப்பாளரிடம் அனுமதி பெற்று என்னைக் கூட்டிச் செல்லுமாறு கூறினேன். உரிய கடிதத்துடன் அடுத்த நாள் 3 மணிக்கு வந்த ஜபார் என்னை வேண்டா வெறுப்புடன் அனுப்பச் சம்மதித்த உதவிப் பணிப்பாளருடன் கடிதத்தைக் கொடுத்து என்னை மனித வள மேம்பாட்டு நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னர் சிறிது நேரம் திரு. பற்குணமவர்களுடன் உரையாடக்கிடைத்தது. என்னைப்பற்றிய முழுவிபரங்களையும் கூறி யாழ் கச்சேரியில் நடந்த சம்பவத்தை நினைவூட்டி எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன். தனது கட்சியைச் சேர்ந்தவனென அடையாளம் கண்ட பற்குணம் என்னோடு மிகவும் ஐக்கியமாகினர்.

அன்றைய தினம் ஒரு 2 மணித்தியாலயங்கள் தமிழ் சினிமா பற்றி ஒரு விரிவுரையை நான் நிகழ்த்தினேன். தலைமை தாங்கிய பற்குணம் எனது உரையை மிகவும் சிலாகித்தார் பார்வையாளர்கள் மத்தியிலும் பரந்த கைதட்டல் கிடைத்தது. அடுத்து வந்த சில நாட்களில் மீண்டும் பிறிதொரு தலைப்பில் சினிமா பற்றிய பேச்சொன்றை அதே தலைமையின் கீழ் நான் நிகழ்த்த சந்தர்ப்பம் கிட்டியது.

கலவரத்தின் காரணமாக புலம் பெயர்ந்து யாழ் சென்ற விடயம் குறித்து 'எதிர்வு' எனும் கதையில் விபரம் குறித்துள்ளதாலும் அதனால் எனக்கேற்பட்ட மன உணர்வுகள் சிலவற்றை 'விருட்சம்' எனும் கதையில் குறிப்பிட்டுள்ளமையாலும் அதனை இங்கு தவிர்த்துக் கொண்டு சி. பற்குணமவர்களின் உதவி பற்றி எடுத்துரைக்க முயல்கிறேன்.

இந்தியாவில் சவுத் ஏசியன் புத்தக நிறுவனத்தாருடன் இணைந்து தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்ட எனது 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' சிறுகதைத் தொகுதியின் 2 பிரதிகளை என்னிடம் சேர்ப்பித்தவர் திரு. பற்குணமவர்களே.

சதிகாரர்களினால் எதுவித நியாயமுமற்ற விதத்தில் வேலை பறிக்கப்பட்டு விலகல் கடிதம் வழங்கப்பட்ட நான் 1 ½ வருடங்கள் உணவுக்கும் வசதியற்று கொடும் துயரை அனுபவித்தேன். மகன் பிறந்து ஒரு வயது கூட ஆகவில்லை. சரஸ்வதி பூசை நடக்குமிடங்களுக்குச் சென்று அங்கு வழங்கப்படும் பிரசாதங்களைச் சில வேளைகளில் பெற்று மனைவிக்கு வழங்கியிருக்கிறேன்.

ஒரு நாள் திரு. பற்குணமவர்களிடம் ஒரு 100/= ரூபா கடன் கேட்கச் சென்றேன். ஆறுதலாக என்னை அமரச் சொல்லிவிட்டு ஒரு பேப்பரில் ஏதோ எழுதத் தொடங்கினார். எனக்கோ அவசரம் ஒரு ½ மணித்தியாலயம் கழிந்த பின் என்னை ஏறிட்ட அவர் ஒரு 100/= தாளை என் கையில் கொடுத்து நேரே வீட்டுக்குப்போம். வேறு ஒரு இடமும் போக வேண்டாம் எனக் கூறினார். நான் கிளம்பும் போது தமது சாரதி திருநாவுக்கரசுவை தான் வரச் சொன்னதாகக் கூறும்படி என்னிடம் பணித்தார். நான் வீடு வந்து சேர்ந்து விட்டேன். அன்றைய பொழுது கழிய அந்த 100/= எனக்குப் போதுமாக இருந்தது. ஆயினும் நான் வீட்டிலேயே பற்குணத்தாரின் சொல்படி நின்றிருந்தேன். எனது வீட்டு வாசலில் பற்குணத்தாரின் [illegible] பிக்கப் வந்து நின்றது. திருநாவுக்கரசு சாரதியாசனத்தை விட்டு இறங்கி பிக்கப்பின் டிக்கியைத் திறந்து பல சாமன் பார்சல்களை எடுத்து வந்து எனது வீட்டின் முன்பக்கத்தில் அடுக்கத் தொடங்கினார்.

அதிர்ந்து நின்றேன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், உலருணவுப் பொருட்கள், சவர்க்காரம் என ஒரு மாத்தத்திற்குப் போதுமான பொருட்கள்.

பற்குணம் பட்டியலிட்டு சாரதியை அனுப்பி எனக்கு உதவிய அந்தப் பண்பு, நண்பர்களே... நான் அறவிடமுடியாத ஒரு கடனாளியாக இப்போதுமுள்ளேன். என் மனைவியும் நானும் அழுது விட்டோம். திருநாவுக்கரசுவும் கண்கலங்கினார். அவர் எனது இந்த எழுத்திற்கு நேரடிச்சாட்சியம். திருநாவுக்கரசு இப்போதும் ஒரு திணைக்களத்தில் சாரதியாக கடமை புரிகிறார். பற்குணமவர்களின் முயற்சியால் அவரது திணைக்களத்திலேயே ஒரு அமைய ஊழியனாக நான் சேர்ந்தமை பின்னாளில் நிகழ்ந்தது.

திரு. பற்குணமவர்களின் கீழ் நான் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அவர் நோய்க்கான சிகிச்சைக்காக தமிழகம் சென்றிருந்தார். சுகமாகிக் கொண்டிருக்கிறார் எனும் தகவல்கள் கிடைத்துக் கொண்டிருந்த நேரம் அவர் இறந்து விட்டார் எனும் செய்தி எமக்கு வந்து சேர்ந்தது.

திரு. பற்குணமவர்கள் பற்றிய ஒரு முக்கிய செய்தி அவர் எழுதிய கவிதைகள் "நெஞ்சின் நெருடல்கள்" என்ற தலைப்பில் பிரசுரமாகியது மட்டுமல்ல "பட்டுக் கோட்டையின் பாட்டுத்திறம்" எனும் ஒரு ரசனைக் குறிப்பும் நூலாகியுள்ளமையாகும்.

எனது பாடல்கள் தொடரும் சமயங்களில் இடையிடை பற்குணமவர்கரைளப்பற்றி நான் எழுதுவேன். நிச்சயமாக அந்த மனிதன் மனிதர்களைப் பிடிப்பவனே தான்.

இதற்கான சாட்சியங்களாக இறந்த கவிஞர் சு.வியும், உயிரோடு இருக்கும் என் போன்ற பலரும் மெளனம் கலைக்கத் தயாராக உள்ளோம். அவர் பற்றி ஒரு சிறுகதை கல்வித் திணைக்களம் வெளியிட்டுள்ள 8ம் ஆண்டு பாடப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

பற்குணத்தின் இறப்புக்கும் பின்னர் மனித வள மேம்பாட்டு நிலைய நூல் நிலையத்திலிருந்த இலக்கிய நூல்கள் வேறு நூல் நிலையத்திற்கு கையளிக்கப்பட்டதுடன். கருத்தாடல் நிகழ்வுகளும் அற்றுப் போய் திருக்கோணமலைக்கு ஒரு வெறுமை சூழ்ந்துள்ளமை உண்மையில் ஒரு நெஞ்சின் நெருடல்தான். திரு சி. பற்குணத்தின் செயற்பாட்டுத் திறன் அவரின் பின்னர் பதவிக்கு வந்த அதிகாரிகளிடம் இல்லாமல் போனமையும் இந் நிகழ்வுக்கு ஒரு காரணம் என்பேன். பிறிதொரு வகையில் பார்த்தால் அந்த மனிதனின் பெயரை நிலை பெறச் செய்யாமல் விடுவதற்கான உள்நோக்கமும் இதில் கலந்திருக்கக் கூடும் என்பதும் சிந்தனைக்குரிய ஒன்றுதான். ஆனாலும் அந்த வெற்றிடம், நல்ல நெஞ்சங்களுக்கு அமரர் பற்குணத்தைப் பற்றி அடிக்கடி நினைவுறுத்திக் கொண்டே இருக்கும். ஏனெனில் அந்த மனிதனால் பிடிக்கப்பட்ட பலர் இன்னும் இறந்து விடவில்லை அவரின் நினைவுகளுடன் உயிர் வாழ்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்திருமலையின் இசையிளவல் - தர்ஷாந்



மாற்றங்கள் நினைத்த கணத்தில் வானிலிருந்து வந்துதிப்பவையல்ல. பிரயத்தனங்கள், அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள், தோல்விகள் அதன் பின்னரான வெற்றிகள் இன்னும் பல நகர்வுகளின் பின் லட்சியங்களின் எட்டுகை மாற்றங்களை பிறப்பிக்கின்றது என்பது பற்றி எமக்குத் தெரியும், உங்களுக்கும் தெரியும் என்ற நம்பிக்கையில் இவ்வாரம் மலைமுரசு தனது அறிமுகத்தில் தங்கவடிவேல் தர்ஷாந்தை அறிமுகம் செய்கிறது.

தன்னுடைய எட்டு வயதிலிருந்தே கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட தர்ஷாந் முறைசார்ந்த கர்நாடக இசையை விரும்பியேற்ற குரைகடலோரான். தமிழர் மரபின் முத்தமிழ்களில் ஒன்றான இசைத்தமிழை தன்னுடலோடு கொண்டு தமிழ்சேர்த்துப் பாடும் இவன் தான் சார்ந்த துறையில் சாதனைகள் பலவற்றின் சொந்தக்காரன். அவரின் சாதனைகளும் விருதுகளும் பின்வருமாறு:

1. 2002, 2003, 2004, 2005, 2008 ஆண்டுகளில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்தின போட்டிகளில் பாடசாலை, வலய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் தான் கலந்து கொண்ட இசைப்பிரிவுப் போட்டிகளில் முதலாமிடம்.

2. Hatton National Bank நடாத்திய தேசிய ரீதியான மும்மொழிப் போட்டியில் தமிழ் மொழி சார்பில் (மத்திய பிரிவில்) தேசிய மட்டத்தில் முதலாமிடம்.

3. அகில இலங்கை சிவலோக சமாஜத்தின் பொன்விழாவை முன்னிட்டு திருக்கோணமலை வலய மட்டப் போட்டியில் (இசை - தனி) முதலாமிடம்.

4. திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றத்தினால் பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் ஞாபகர்த்தமாக நடாத்தப்பட்ட இசைப் போட்டியில் முதலாமிடம்.

பெற்ற விருதுகள்:- அகில இலங்கை தமிழ்தினப் போட்டிகள்.

2002
2003
2005
2008 } இசை - தனி - தங்கப்பதக்கம்.

2004 - பாவோதல் - தங்கப்பதக்கம்

Hatton National Bank
நடாத்திய போட்டியில் - தங்கப்பதக்கம்
அகில இலங்கை ரீதியில்

இவ்வாறு இசைத்துறையில் பரிணமித்து வரும் தர்ஷாந் திருமறைக் கலாமன்றத்தால் இளம் சாதனையளார் என விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். தன்னுடைய இந்த இசைப்பயணத்துக்கு தன்னை பெரிதும் ஊக்கப்படுத்தியது தன்னுடைய பெற்றோர், சகோதரர் மற்றும் தாத்தா, பாட்டி என குறிப்பிடுகிறார். அத்தோடு சிறுவயது முதலே கர்நாடக மற்றும் மேலைத்தேய இசைத்துறையில் (காலஞ்சென்ற திருமதி. சந்திரவதனா), திருமதி. இந்திரசேனன், திருமதி. தவசிங்கம், திரு. லியோஜஸ்ரின் ஆகியோர் தம்மை செம்மைப்படுத்தியதாகவும் அவர்களுக்கும் தன்னைப் படைத்த இறைவனுக்கும் நன்றிக்கடன் செலுத்துவதாகவும் கூறும் தர்ஷாந்.

"இசை என்பது இந்துமதத்தின் நால்வேதங்களிலும் ஐந்தாவதாக இடம்பெற வேண்டியது. இன்றையோர் இசையை விரும்புகின்ற போதிலும் எமது கலாச்சாரத்தைச் சார்ந்த இசையை ஏற்க மறுக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். வாழ்க்கையில் அமைதியை முழுமையாக வழங்குவது இசை மாத்திரம் தான் என்று குறிப்பிடுகிறார்".

அப்பன் சிவனார்க்கு திருஞானசம்பந்தன் வாய்பாடி புகழ்பூத்த ஈழத்திருமலைக்கு தர்ஷாந் இசையால் வளம்சேர்ப்பார் என்ற நம்பிக்கையில் மலைமுரசு இந்த இளைய இசையிளைஞனை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வாழ்த்துகின்றது.

- [illegible] -

## இலவசக் கவிதைப் பயிற்சிப் பட்டறை

கலை கலாசார அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் (அரங்காடல் குழுவினர்) இலவசக் கவிதைப் பயிற்சிப் பட்டறை வருகின்ற செப்டம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றவிரும்பும் இளையோர் உங்கள் சுயவிபரங்களோடு சிறிய புகைப்படம் (விரும்பினால்) என்பவற்றை அண்மையில் எழுதிய கவிதையொன்றோடு இணைத்து மலைமுரசின் ஆசிரியர்பீட முகவரிக்கு செப்டம்பர் [illegible] முதல் (14.09.2012) கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

### இவ்வாரம் சே வின் கவிதைகளில் ஒன்று
### பெயர்ப்பு - யமுனா இராசேந்திரன்

## கடைசி உயிலும் கடைசி வாக்கு மூலமும்

நான் ஒரு கைதியாக அவர்களிடம் இல்லையென்று
அவர்கள் சொன்னால்
நீங்கள் அதை நம்பவேண்டாம்

என்றோ ஒரு நாள் நிச்சயமாக அவர்கள்
அதை
ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்

என்னை விடுதலை செய்து விட்டதாக அவர்கள்
சொன்னால்
அதை நீங்கள் நம்பவேண்டாம்

என்றோ ஒருநாள் நிச்சயமாக அவர்கள்
தாங்கள் பொய் சொன்னதாக
ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்

நான் கட்சிக்குத் துரோகமிழைத்து விட்டதாக
அவர்கள் சொன்னால்
நீங்கள் அதை நம்ப வேண்டாம்

என்றோ ஒருநாள்
நான் கட்சிக்கு விசுவாசமாகத்தான் இருந்தேன்
என்பதை
ஒப்புக் கொள்வார்கள்

அவர்களை நம்ப வேண்டாம்
நம்பவே வேண்டாம்
அவர்கள் சொல்கிற எதையும்
நம்ப வேண்டாம்
அவர்கள் சத்தியம் செய்கிற எதையும்
அவர்கள்
சுட்டிக் காண்பிக்கிற எதையும்

அவர்களை நம்ப வேண்டாம்

கடைசியாக அந்த நாள் வரும்போது
அவர்கள் உங்களிடம் வந்து
என் உடம்பை
அடையாளம் காட்டச் சொல்லும்படி
கேட்கும்போது
ஒரு குரல் சொல்லும்

நாங்கள் இவனைக் கொன்றோம்
இந்த அயோக்கியன் செத்துப்போனான்
இவன் செத்தான்

நான் முழுமையாக
முற்று முழுதாக நிச்சயமாக
இறந்து விட்டேன் என்று அவர்கள்
சொல்லும் போதும்

அவர்களை நம்ப வேண்டாம்
அவர்களை நம்ப வேண்டாம்
அவர்களை நம்ப வேண்டாம்

## மலைமுரசை வாழ்த்துகின்றேன். . .

(சி.அம்பலவாணர், கடல்முக வீதி, திருக்கோணமலை)

### வேண்டும்!

ஈழத் திருமலைக்கோர் இதழ்வேண்டும் முரசொலிக்க
ஆழம் கணித்தறிய அகலநீளம் காண!
காலம் கழிந்தாலும் கன குடிவந்தமர்ந்தாலும்
மூலம் தனை மறைக்க முழு முயற்சி செய்தாலும்
மலை முரசு வேண்டியதே.

மறவேல் - கிழமை தோறும்
விலை கொடுங்கள் இருபதுதான். விரும்பிப்படியுங்கள்!
நலமுண்டு நம்மவர்க்கு

நடுக்கடலில் தத்தளிக்கும்
கலத்திற்கோர் ஒளிவீடாய் - கரை சேர்க்கும் 'காட்டி' என
நிலையாய் முரசுதனை நீடூழி முழக்கட்டும்!
கலையட்டும் பலர்தூக்கம் காணட்டும் புதுவிடியல்!
ஆடு மாடாய்த்தின்று ஆளையே தின்னவரும்
கேடு மறையட்டும் கேட்கட்டும் முரசோசை!
'விருத்தி' தொடரட்டும், வித்தைகளைக் காட்டாமல்
பொருத்தமாய் நால் மதமும் - மூவினமும் புகழோடு
வாழ்வாங்கு வாழட்டும், வந்திடட்டும் சமநீதி!
[illegible] எழுச்சி பெற **வேண்டும்** மலைமுரசே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான பாலியல் துஸ்பிரயோகம்

பாகம் - 02

இனி நாம் மோசமான பாலியல் துஸ்பிரயோகம் பற்றி சற்றே நோக்குவோம். இது பாலியல் சுரண்டலிலிருந்து சற்றே பாரதூரமான குற்றமாக கருதப்படுகின்றது. இது சிறுவர்களை உடல், உள ரீதியாக பாதிப்புக்குள்ளாக்குகின்றது. மோசமான பாலியல் துஸ்பிரயோகம் என்பது

- பாலியல் வல்லுறவு
- பாலியல் தாக்குதல்
- தடுக்கப்பட்ட உறவில் பாலுறவு
- சட்டபூர்வமற்ற தன்னினச்சேர்க்கை

என்பவற்றை உள்ளடக்குவதாக அமைந்துள்ளது.

**- மாதினி -**

16 வயதுக்குட்பட்ட பெண்ணை அவளுடைய சம்மதத்துடனோ சம்மதமின்றியோ உறவுகொள்ளுதல் குற்றமாகும். 16 வயதுக்குட்பட்ட பெண்ணுடன் 18 வயதுக்குட்பட்ட ஆண் அவளின் சம்மதத்துடன் உடலுறவு புரிந்தால் பத்து வருடத்துக்கு குறைந்த சிறைத்தண்டனை வழங்கப்படும். சராசரியாக இலங்கையில் இடம்பெறும் 10 பாலியல் வல்லுறவு சம்பவங்களில் 04 தந்தைகளினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. 2011ம் ஆண்டு நாடாளவிய ரீதியில் 1160 சிறுவர் மீதான பாலியல் வல்லுறவுச்சம்பவங்களும், துஸ்பிரயோக சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2012 ஜனவரி தொடக்கம் யூன் வரையான ஆறு மாத காலப்பகுதிகளில் 700 சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப்பேச்சாளர் அஜீத ரோகண தெரிவித்துள்ளார். 2012 யூலை மாத இறுதியில் கேகாலை மாவனல்லைப் பிரதேசத்திலுள்ள சிறுவர் இல்லமொன்றில் 15 வயதுக்குட்பட்ட 15 சிறுமிகளை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் அச்சிறுவர் இல்ல பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். 2012 யூலை மாத ஆரம்பத்தில் கொழும்பு கிருலப்பனையில் ஆறு வயதுச்சிறுமியான துஸாந்தினி கிருஸ்ணகுமார், 16 வயதுடைய உறவினனான சிறுவனாலும், இன்னுமொரு 18 வயதுடைய இளைஞனாலும் பாலியல் துஸ்பிரயோகஞ் செய்யப்பட்டு கால்வாயில் தள்ளப்பட்டு படுகொலை செய்யப்பட்ட செய்தியையும் அறிந்திருப்பீர்கள்..

தற்காலத்தில் தன்னினச்சேர்க்கை என்பது புதிய வகையான பூதாகரமான செயலாக உருவாகி வருகிறது. ஸ்பெயின், பிரான்ஸ், அமெரிக்காவின் சில மாநிலங்கள் என பல வெளிநாடுகளில் சட்டஅங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலும் சிறுவருடனான தன்னினச்சேர்க்கைக்கு எங்குமே அங்கீகாரம் வழங்கப்படவில்லை. நம் நாட்டிலேற்பட்டுள்ள சுற்றுலாத்துறை வளர்ச்சியினாலும், சுனாமியின் பின்னரான அந்நியரின் நுழைவினாலும் வெளிநாட்டவர்கள் நம்நாட்டு சிறுவர்களை தன்னினச்சேர்க்கைக்காக பயன்படுத்தும் அபாயம் உருவாகியுள்ளது. ஹிக்கடுவ கடற்கரையோர நட்சத்திர ஹோட்டல்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றன. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் 16 வயதுக்குட்பட்ட ஆணுடன் பாலுறவு கொள்வது குற்றமாகும். இலங்கை பெண்களும் சிறார்களும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்படும் நிலைமை காணப்படுவதாக அமெரிக்க அரசுத்துறையினரால் வெளியிடப்பட்ட 2012ம் ஆண்டிற்கான சட்ட விரோத ஆட்கடத்தல் குறித்த உலகளாவிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்களை விட ஆண் சிறுவர்கள் அதிகளவில் பாலியல் அடிமைகளாக பயன்படுத்தப்படுவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ■ சிறுவர் ஆபாச பிரசுரம் ( Children Phonography)

சிறுவர் ஆபாச பிரசுரம் என்பது உண்மையான அல்லது தூண்டப்பட்ட வெளிப்படையான பாலியல் செயற்பாடுகளில் அல்லது முக்கியமாக பாலியல் நோக்கங்களுக்காக சிறுவர் ஒருவரின் பாலியல் உறுப்புக்களை காண்பித்தல் அல்லது ஈடுபடுத்தப்பட்ட சிறுவரை ஏதேனும் வழிகளில் எதையேனும் வெளிப்படுத்தலாகும். சிறுவர் ஒருவரை ஏதேனும் ஆபாசமான அல்லது கீழ்த்தரமான கண்காட்சி அல்லது காட்சியில் தோன்றுமாறு அல்லது பங்கேற்குமாறு செய்தல், ஏதேனும் ஆபாசமான ஒளிப்பதிவு செய்தல் உட்பட புகைப்படத்தில் அல்லது திரைப்படத்தில் தோன்றுமாறு அல்லது வாடகைக்கு அமர்த்துதல், ஊழியத்தில் அமர்த்துதல், அதற்கு உதவி செய்தல், அதற்குத் தூண்டுதல், அச்சுறுத்தல் என்பன அடங்கும்.

சிறுவர்கள் தோன்றுகின்ற ஆபாச பிரசுரங்களை விற்பது, .விநியோகிப்பது, உடைமையில் வைத்திருத்தல் என்பன குற்றங்களாகும். சிறுவரின் பெற்றோராகவோ பாதுகாவலராகவோ இருந்து கொண்டு அதனை அனுமதிப்பதுவும் குற்றமாகும். புகைப்பட அல்லது திரைப்பட உருவிளக்கப்படுத்துபவர்கள் தமது தொழிலின் போது சிறுவர் தொடர்பான ஆபாசப்படங்களைக் கண்டால் காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டும். அங்ஙனம் தெரிவிக்காமையும் குற்றமே.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் அனுகூலங்கள் உள்ளதைப் போல பல பிரதிகூலங்களும் உள்ளன. அவ்வகையில் வலைத்தளங்கள் (Web sites) , இணையத்தளப் பாவனை, கையடக்கத் தொலைபேசிப்பாவனை என்பன சிறுவர் தொடர்பான பிரசுரங்களைப் புரிய தனிச்சக்தியையே வழங்குகின்றன. தற்போது நம்நாட்டில் வீதிக்கொரு இணையதள (Internet) சேவை நிலையம் என அதிவேகமாக உருவாகிவருகின்றன. இத்தகைய நிலையங்களில் சிறுவர்கள் எவ்வித கட்டுபாடுமின்றி வெப்தளங்களிலுள்ள ஆபாசப்படங்களை அணுகமுடிகிறது. இது இளைய சமூகத்தினரை தவறான பாதைக்கு இட்டச்செல்லும் என்பது யாவரும் அறிந்த விடயமே. ஆகவே கணனி வசதிகள் மூலம் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் செய்தல் தொடர்பாக குற்றத்துக்குள்ளாகும் செயலொன்றைப் புரிவதற்கு கணனி உபயோகிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டாக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அவ்வித செயல் பற்றி அறிந்தால் உடனேயே அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுக்க வேண்டும் அப்படிச் செய்யாமலிருத்தலும் குற்றமாகும்.

ஆனால் இன்று கையடக்கத்தொலைபேசியின் மூலமாக சிறுவர் தொடர்பான ஆபாசப்படங்கள் ஒளிப்பதிவு செய்யப்படுவதுவும், MMS மூலமாக பரிமாற்றஞ் செய்யப்படும் நடவடிக்கை காட்டுத்தீ போல பரவி வருகிறது. இதனை கட்டுப்படுத்துவது கடினமாகவுள்ளது. பாடசாலை செல்லும் சிறுவர் முதல் முதியவர் வரை சகலரும் கையடக்கத்தொலைபேசியைப் பாவிப்பதால் இத்தகைய சூழல் நிலவுகிறது. கையடக்கத் தொலைபேசியின் காணொளி (Video) சேவையைப் பாவித்து சிறுவர் ஆபாசப்படங்கள் எடுக்கப்படுகின்றன. பாடசாலை விடுதிகள், உடை மாற்றும் அறைகள், மலசலகூடங்கள் என்பனவற்றை இதற்கான இடங்களாக குற்றவாளிகள் பயன்படுத்துகிறார்கள். எனவே பாடசாலை அதிபர்கள், விடுதி பொறுப்பாளர்கள் மிகவும் அவதானத்துடன் செயலாற்ற வேண்டும்.

ஒரு சிறுவனோ சிறுமியோ தனக்கு இழைக்கப்பட்ட குற்றந் தொடர்பில் அறியாதவராகக் கூட இருக்கலாம். அது அவர்களுக்கெதிராக மற்றோர் புரியும் குற்றமென உணராமல் இருக்கலாம். குற்றந் தொடர்பில் தெளிவான ஆதாரங்கள் இருக்குமிடத்து எவரேனும் தகவலை வழங்க முடியும். குற்றச் செயலுக்கு இலக்கான சிறுவர்களும் தகவலை வழங்கலாம். உங்கள் அயலிலுள்ள சிறுவர்களுக்கு உடலில் காயங்கள், நடத்தை மாற்றம் உள்ளதாக நீங்கள் அவதானிக்குமிடத்து அவர்களுக்கெதிராக குற்றமொன்று புரியப்படுவதாக சந்தேகிக்குமிடத்து உரிய சிறுவரின் பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு தெரிவிக்க வேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர், கிராமஅதிகாரி, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சட்ட உதவி ஆணைக்குழுவின் பிராந்திய மத்தியஸ்தர், யுனிசெவ் அமைப்பு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை முதலியவற்றுக்கு அறிவிக்கலாம். குற்றச் செயலொன்று தொடர்பான தகவலை பொலிஸ்நிலையத்தில் எழுத்தின் மூலமோ, வாய்மொழி மூலமாகவோ வழங்க முடியும். தொலைபேசி தொடர்பு மூலம் அல்லது கடிதம்,தொலைநகல்,மின்னஞ்சல் மூலமாகவும் வழங்கலாம். 2010 யூலை 22ம் திகதி நாடாளவியரீதியில் 24 மணி நேர தொலைபேசி சேவையை தேசிய சிறுவர் பாதுகாப்பு 'அதிகார சபை ஆரம்பித்துள்ளது. 1929 என்ற எண் மூலம் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

முதலில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் பிள்ளைகள் தொடர்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தல் அவசியமாகின்றது. பெற்றோரிடையான திருமண முறிவு, சண்டை, பராமரிப்பின்மை என்பவற்றால் சிறுவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். சிறுவர்களை இரவு வேளையில் வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது. சிறுவர்களை அறியாத, பழக்கமில்லாத நபர்களிடம் பழக அனுமதிக்கக்கூடாது. பெற்றோர்கள் இவை தொடர்பாக பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பாடசாலைகளிலும் சிறுவர்களுக்கு இது தொடர்பான விடயங்கள் கற்பிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் தமக்கு எதிராக குற்றங்களைப்புரியும் போது 'வேண்டாம்' எனச் சொல்லப்பழக்கப்பட வேண்டும். தமக்கு மட்டுமே தமது உடல் சொந்தமானது எனும் எண்ணம் அவர்களுக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சட்ட சீர்திருத்தங்கள் எத்தனை கொண்டு வரப்பட்டாலும் மனிதர்களின் மனங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். அதுவே குற்றங்கள் குறைய ஒரே வழியாக அமையும். எனவே இது தொடர்பில் சகலருக்கும் விழிப்புணர்வு அவசியமாகிறது. இவை தொடர்பான சட்டங்கள் பற்றிய அறிவு சாதாரண மனிதர்களையும் சென்றடைய வேண்டும். அப்போது தான் குற்றங்கள் குறையும். சட்டங்களும் தண்டனைகளும் கடினமானதாக இருந்தாலும் சமூகம் அவர்கள் தொடர்பில் அக்கறை செலுத்தாவிட்டால் பாதுகாக்க முடியாது. சிறுவருக்கெதிராக குற்றங்கள் புரியப்படும் போது "யாரோ பெற்ற பிள்ளை தானே நமக்கென்ன எனும் போக்குடன் செயற்படக்கூடாது" ஏனெனில் அதே வகையான குற்றம் தொடர்ந்தும் இடம்பெறுவதை தடுக்கவியலாமல் போய்விடும். எனவே சிறுவர்களுடைய நலமான எதிர்காலத்துக்காக உசிதமான சிறுவர் உலகத்தை கட்டியெழுப்ப இதயத்தின் ஆழமான அடித்தளத்தினூடாக அர்ப்பணிப்புச் செய்வோம் என ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே இத்தகைய குற்றங்களை முற்றாக கட்டுப்படுத்த ஒரே தீர்வாகும்.



30. 08. 2012 புளியங்குளம் ஸ்ரீ [illegible]



31. 08. 2012 ஆவணி வெள்ளி [illegible]

மலைமுரசுடன் இலத்திரனியல் தொடர்பாடலை மேற்கொள்ள நீங்கள் அஞ்சலிட வேண்டிய முகவரி
malaimurasu@hotmail.com
**செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க**
0770180218, 0754252042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### மிகின் லங்கா விமான சேவைக்கு புதிய விமானம்

சனிக்கிழமை பண்டாரநாயக்க விமான நிலையத்தில் மிகின் லங்காவுக்கென்று புதியதொரு விமானம் வந்து சேர்ந்தது. 210 ஆசனங்களுடன் கூடிய யுசைடிரள 321 வகை விமானமே மிகின் லங்காவினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகள் கேலித்தனமானவை

பிரபல்யமான பொருளாதார நிபுணரும், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி லலிதா சிரிகுணருவான் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தின் கோரிக்கைகள் பொருத்தமற்ற, தர்க்கமற்ற, தேவையற்றவையாகும் எனக் கூறியுள்ளார்.

கலைப்பீட ஆசிரியர் சங்கத்துக்கும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்துக்கும் அனுப்பியுள்ள கடிதமொன்றில் அவர் "மொத்தத் தேசிய உற்பத்தியில் 6மூ த்தை நிரந்தரமாகக் கல்விக்கு ஒதுக்குவதென்பது சாத்தியமற்றது" எனக் கூறியுள்ளார்.

"இவ் 6மூ என்பது அரச மொத்த இறைவருமானத்தின் மூன்றிலொரு பங்காகவும், மொத்த அரசுச் செலவின் நான்கிலொரு பங்காகவும் காணப்படுகிறது. இதனால் அபிவிருத்தித் திட்டங்களில் அரசு ஈடுபடுவது தடைப்படும்" எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு 6மூ ஒதுக்கப்படுமாயின் அரசு மின்வலு, ரயில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம், விமான சேவைகள் போன்வற்றிலிருந்து பெருமளவு நிதியை கல்விக்கு ஒதுக்க வேண்டியிருக்கும் எனவும் கூறினார்.

### சனாதிபதியை அவதூறு செய்தால் எதிர்நடவடிக்கைகள் இல்லை

பொது மேடைகளிலும், சனத்திரள்கள் இடையேயும் கடந்த சில நாட்களாக சனாதிபதியை நிந்திக்கும் பேச்சுக்கள் பல நிகழ்ந்ததைத் தொடர்ந்து இலங்கையின் காவல்துறை அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க களம் புகுந்திருந்தது. எனினும் சனாதிபதி "நானொரு முதிர்ந்த அரசியல் வாதியாய் இருப்பதால் எனக்கெதிராக மேற்கொள்ளப்படும் அவதூறுகளையும் பிரசாரங்களையும் பற்றி கவலைப்படவில்லை" என்றும் "அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை" என்றும் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தலைப் பிறப்பித்துள்ளார்.

## The Sunday Leader

### சனாதிபதியே என்னைப் பதவி விலகக் கோரினார்

தன்னைப் பதவி விலகுமாறு சனாதிபதியே கோரியதாக இலங்கைப் பிணைகள் மற்றும் நாணயப்பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் திலக் கருணாரத்ண தெரிவித்தார். தன்னுடன் நேரடியாக சனாதிபதி பேசாது விட்டாலும் அவருக்கு மிக மிக நெருக்கமானவர்களிடமிருந்தே தான்அச் செய்தியைப் பெற்றுக் கொண்டதாக அவர் மேலும் கூறினார்.

தன்னை அப்பதவியை ஏற்குமாறு மூன்று தடவைகள் சனாதிபதி கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே தான் அப்பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் தான் சனாதிபதியின் நெருங்கிய நண்பனாக இருந்ததால் தாமிருவரும் இணைந்து பிணைகள் மற்றும் நாணயப் பரிவர்த்தனை தொடர்பான ஊழல்களுக்கு முற்றுப்புள்ளியிடலாம் எனவும் தான் நினைத்ததாக அவர் தெரிவித்தார். எனினும் ஊழல்களுக்குப் பொறுப்பானவர்கள் யார் எனப் பட்டியலிட திலக் மறுத்துவிட்டார்.

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கையில் காரியவசம்

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவரான பிரதீப் காரியவசத்தினை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைக்கு உட்படுத்தியுள்ளது. தேசிய சேமிப்பு வங்கிக்கும் த பினான்ஸ் கம்பனிக்குமிடையே நிகழ்ந்த பங்குப்பரிவர்த்தனை குற்றச்சாட்டுத் தொடர்பாகவே இவ் விசாரணை ஆரம்பமாகியுள்ளது. பெரும் விலைகொடுத்து த பினான்ஸ் கம்பனியின் பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்தது எனும் குற்றச்சாட்டின் பேரில் தனது பதவியை தானே விலகிய காரியவசத்திடம் ஆரம்ப கட்டமாக தனது பக்க வாதத்தை அறிக்கையாகத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

### பாணந்துரைக் கடலில் மூழ்கியது கப்பல் - அரசிடம் 450 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்தைக் கோரவுள்ளது.

பாணந்துரைக் கடலில் கடந்த வாரம் மூழ்கிய கப்பலில் பொருட்களை ஏற்றியிருந்த 5 கம்பனிகளும் வாணிபக் கப்பல்த்துறைப் பணிப்பாளர் நாயகத்திடம் 450 மில்லியன் நட்டத்தைக் கோரவுள்ளன. கடந்த ஐந்து வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இக்கப்பலில் 15000 தொன் இரும்புச் சட்டங்களும், 24000 தொன் இரும்பு உருக்கும், 2500 தொன் சீமெந்துத் தயாரிப்பிற்கான இயந்திரங்களும் ஏற்றப்பட்டிருந்தன.

### தொழிற்பட மறுத்த பாரந்தூக்கி இயந்திரங்கள்

கொழும்புத் துறைமுகத்தில் நான்கு பாரந்தூக்கி இயந்திரங்கள் தொழிற்பட மறுத்துள்ளன. இவை ஒரே வகையான எரிபொருளைப் பாவித்ததாலேயே சேதமாகியுள்ளதாக தெரிவித்த துறைமுக அதிகாரசபைத் தலைவர் அவ் எரிபொருள் வியட்னாமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளால் தான் இவை நேர்ந்ததா எனும் கேள்விக்கு விடையளிக்க மறுத்துவிட்டார்.

## The Sunday Times:

### இராணுவ நலன்புரி வசதிகளுக்கு சீனாவிடமிருந்து 100 மில்லி.அ.டொ உதவி

வடக்குக் கிழக்கில் இராணுவ நலன்புரி வசதிகளுக்காக சீனா 100 மில். அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. வடக்குக் கிழக்கின் கேந்திர நிலையங்களில் இராணுவப் பலத்தைத் தக்கவைப்பதன் ஊடாகவே தேசிய பாதுகாப்பைப் பேணும் நோக்குடனேயே இவ் உதவிகள் பயன்படுத்தப்படப் போகின்றன.

### ஆயிரக்கணக்கான காணி ஊழல்கள் - கொழும்பு உட்பட

சட்டவிரோதமாக குடியேறியமை, அத்துமீறிப் பிரவேசித்துள்ளமை, காணிஉறுதியில் ஊழல் செய்தமை தொடர்பாக எழுந்துள்ள 3,500க்கும் மேற்பட்ட குற்றச் சாட்டுக்களை விசாரித்துவரும் இரகசிய காவல்துறைப் பிரிவு கொழும்பில் இயங்கிய 6 குழுக்களைக் கைதுசெய்துள்ளதுடன் 1165 முறைப்பாடுகளை விசாரித்து முடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இவ் விடயத்தில் கைதாகித் தடுப்பிலுள்ளவர்கள் தொடர்ந்தும் சட்டவிரோத நடவடிக்கைகளில் சிறைச் சாலையிலிருந்தே ஈடுபடுவது தெரியவந்துள்ளதாக இரகசிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

### வன்னி இழந்ததை மொனாராகலை பெற்றுக்கொண்டது

பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்றை வன்னி இழந்துள்ள நிலையில் மொனராகலை மேலும் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. தேர்தல் பிரதேசங்களில் உள்ள வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையே பாராளுமன்ற ஆசனங்களைத் தீர்மானிக்கும் விடயமாக உள்ளது. வன்னியிலிருந்த வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை 270 ஆயிரத்திலிருந்து 221 ஆயிரமாய்க் குறைந்ததாலேயே இந் நிலமை ஏற்பட்டது. அவ்வாறே கடந்த வருடம 816 ஆயிரமாக இருந்த யாழ் தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 484 ஆயிரமாய்க் குறைந்ததைத் தொடர்ந்து அம் மாவட்டத்திற்கான பாராளுமன்ற ஆசனங்கள் 10லிருந்து 06 ஆகக் குறைந்தமை குறிப்படத்தக்கது.

## வேலைவாய்ப்புகள்

**ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP)**

சாரதிகள் (இலங்கையின் எல்லா மாவட்டங்களுக்கும்)

**ஐந்து வருட வாகனச் சாரதி அனுபவம்**
**ஒரு வருட ஐ.நா சபை நிறுவனங்களில் வேலை செய்திருப்பது விரும்பத்தக்கது.**

சுய விபரக்கோவையுடன் உசாத்துணைக்குரிய இருவரின் தொலைபேசி இலக்கங்களை இணைத்து 02.09.2012 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

United National Development Project (UNDP)
202 - 204 Bauddhaloka mawatha, Colombo - 07.

## வர்த்தமானி அறிவித்தல்கள் 17.08.2012

**ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சைவைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை 2012. செத்தெம்பர்**

1991.05.17 ஆந் திகதிய 662/. 11 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக்குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத் தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2012.09.30 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

## வர்த்தமானி அறிவித்தல்கள் 24.08.2012

**பொது, நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் மாவட்ட, பிரதேசசெயலகங்களில் சேவையாற்றுவதற்காக நியமனம் செய்யப்படுவதற்கு இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

மேற்கூறப்பட்ட பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகுதிபெற்ற இலங்கைப் பிரசை களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**தொழில்சார் தகைமைகள்**

மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா அல்லது தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா அல்லது கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா அல்லது இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும்

பொறியியற் பரீட்சையில் முதலாம் பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்குச் சமமானதென இலங்கைத் தொழில்நுட்பவியற் சேவைச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு ஏனைய தகைமைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற் கைதிகளை உடனடியாக....

அனைத்துத் தமிழ்கைதிகளினதும் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமூகச்செயற் பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

அரசியற் கைதிகளின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களில் நிமலரூபன், டில்ருக்ஸன் என்ற இரு அரசியற் கைதிகளும் சமீபத்தில் மரணித்திருந்தனர்.

அத்துடன் பல அரசியற் கைதிகள் படுகாயங்களுடன் தடுத்துவைக்க ப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சனையை நாடு முழுவதற்கும் கொண்டு செல்ல வேண்டிய தேவை எழுந்துள்ளது. இப் பின்னணியில்தான் மனித உரிமைச் செயற் பாட்டாளர்களினால் இப்பணி முன்னெடுக்க ப்படுகின்றது.

## திருமலையில் 14...

தேர்தல் முறைப்பாடுகளை கிழக்கு மாகாணம் கொண்டுள்ள வேளையில் அம்பாறை மாவட்டத்தில் அதிகூடியதாக 35 முறைப்பாடுகளும், மட்டக்களப்பில் 33 முறைப்பாடுகளும் தற்போதுவரை பதிவாகியுள்ளன. திருக்கோணமலையில் வெறும் 14 முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன.

## கைத்தொலைபேசியால்...

கைத்தொலைபேசியில் உரையாடியபடி தொடருந்துப் பாதையில் நடந்து வந்தபோதே இத் தொழிலாளி அதிகாலையில் கொழும்பிலிருந்து வரும் தொடருந்தில் மோதுண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிறிமா நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளியாக வேலைசெய்துவந்த இவரின் சடலம் 30.08.2012 அன்று பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினரிடம் கையளிப்பதற்காக திருகோணமலைத் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

## கொடகே சாகித்திய விருது...

திரு. நந்தினி சேவியரின் நெல்லிமரப் பள்ளிக்கூடம், திரு. கிண்ணியா ஏ.எம்.எம் அலியின் ஒரு தென்னைமரம் என்பவையே இறுதிச் சுற்றுக்குத் தெரிவான ஐந்து சிறுகதைத் தொகுதிகளில் திருமலை மண்ணைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரு தொகுதிகளாகும்.

சிறுகதைத்துறைக்கு வழங்கப்படும் கொடகே சாகித்திய விருது இம்முறை ஈழத்து தமிழ் இலக்கியத் துறைக்கு பணியாற்றி மறைந்த கே. டானியல் அவர்களின் நினைவாக வழங்கப்படுகின்றது.

14வது கொடகே தேசிய சாகித்திய விருது விழா எதிர்வரும் 06.09.2012 அன்று கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை இலக்கியத்தை வளர்த்தெடுக்கும் முகமாக முன்னெடுக்கப்படும் இச் சாகித்திய விருது கடந்த மூன்று வருடங்களாக தமிழ் இலக்கியத்தை வளர்த்தெடுத்துச் செல்லும் வகையிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ் விழாவில் 2011ல் வெளியான நாவல், சிறுகதை, கவிதை நூல்களில் இறுதிச்சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களிற் சிறந்தவை தெரிவு செய்யப்பட்டு கொடகே சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது.

2011ம் ஆண்டுக்கான கொடகே வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதை சுமார் அரைநூற்றாண்டுகளாக தமிழ் மற்றும் ஆங்கிலமொழிகளில் இலக்கிய வளர்ச்சிக்காக தொண்டாற்றிவரும் ஐயா கே.எஸ். சிவகுமாரன் அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

## ஸ்ரீ லட்சுமி நாராயணர்...

பின்னிரவு 12.30 மணிவரை ஹரிராம சங்கீர்த்தனை, பஜனை, கலை நிகழ்ச்சிகள், தீப ஆராதனைகள் என்பனவும் இடம்பெறும்.

## புதிய சுதந்திரக்கட்சி ...

இந்த நாளில் முன்னாள் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டனர்.

## அன்னதான மண்டபத் திறப்பு விழா

திருமலை மாணிக்க வாசகர் வீதியில் அமைந்துள்ள பேச்சி அம்மன் ஆலயத்தின் அன்னதான மண்டபத் திறப்புவிழா 31.08.2012 வெள்ளிக் கிழமை காலை 10 மணியளவில் நடந்தேறியது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற அன்னதான நிகழ்விலும் அடியார்கள் பலர் கலந்து கொண்டனர்.

இம் மண்டபத் திறப்பு விழாவிற்கு உதவிய அனைவருக்கும் ஆலயகர்த்தா ஆலயத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். பேச்சி அம்மன் ஆலயத்தில் அத்தினத்தில் பௌர்ணமி தினப் பூசைகளும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## கடித்த பாம்பை கடித்துக் குதறிய நேபாளி

"கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நேரம் நான் எனது வயற்பரப்பில் கடுமையாக வேலை செய்து கொண்டிருந்தேன். 55 வயதான எனது காலை பதம்பார்த்தது ஒரு கருநாகப்பாம்பு. எனக்கு விசம் தலைக்கேறியதோ இல்லையோ கோபம் தலைக்கேற அந்தப் பாம்பை வயல், வரப்பெங்கும் களைத்து ஒருவாறு பிடித்துவிட்டேன். உன் பல்லாலே என்னைக் கடித்தாய் பாம்பே எனக் கூச்சலிட்ட நான் என் பல்லாலே அப் பாம்பைக் கடித்துத் துண்டாக்கிக் கொன்றுவிட்டேன்." என வைத்தியசாலையில் பாம்புக் கடியிலிருந்து குணமடைந்து வரும் மியா எனும் நேபாள விவசாயி கூறினார்.

நேபாளத்தில் வருடாந்தம் 20,000 பேர் பாம்புக்கடிக்கு இலக்காவதுடன் அதில் சுமார் 1,000 பேர் மரணமடைவதும் பதிவாகியுள்ளது. விசமுள்ள, விசமற்ற பாம்பு வகைகள் பலவற்றைக் கொண்டுள்ள நேபாளத்தில் சுமார் 33 அடிவரை வளரும் விசப்பாம்பினங்கள் கூட உள்ளதாக தெரிவித்துள்ள ஆய்வாளர்கள் பொதுவாக ஆறரை அடி நீளமுள்ள ராஜ நாகங்களே மக்களை பெருமளவு கடிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.








இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்





இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 02. 09. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org